**கைத்தொழில் அபிவிருத்திச் சபை - 2010**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார்விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத கீழ் வருவன அவதானிக்கப்பட்டன.

| | இலங்கை கணக்கீட்டு நியமம் (இகநி) | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இ.க.நி 3 | உரிமை மூலதன மாற்றக்கூற்று நிதிசார் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | இ.க.நி 18 | சொத்துக்கள் இருந்த காலப்பகுதியின் அடிப்படையில் தேய்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், சபையின் தேய்மானக் கொள்கை அதற்கு முரணாக பின்பற்றப்பட்டிருந்தது. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்**

(i) சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 20,679,844 க்கான பொருட்கள் விசேட செயற்திட்டத்தின் கீழ் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தன.

(ii) தற்போது நடைமுறையில் இல்லாத பண்டங்கள், சேவைகள் வரியாகப் பெறவேண்டிய ரூபா 1,424,654 நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 21.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிசார் கூற்றுக்களையும் உபபதிவேடுகளையும் இணக்கஞ்செய்கையில் கழிவுப் பொருள் விற்பனை வருவாயில் ரூபா 22,232,003 வேறுபாடும் கழிவுப் பொருள் கொள்வனவுச் செலவினத்தில் ரூபா 27,476,261 வேறுபாடும் அவதானிக்கப்பட்டன.

(ii) நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வார்ப்புப் பிரிவு, பிலிமத்தலாவ பித்தளை நிலையம் மற்றும் இறப்பர் பிரிவின் கையிருப்புகள் என்பன சரி, பிழை பார்த்தல் அறிக்கைகளுடன் இணக்கஞ் செய்யப்படுகையில் கீழே உள்ளவாறு ரூபா 75,832 கூடுதலாகவும் ரூபா 1,080,500 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

| கையிருப்பு | நிதிசார் கூற்றுக்களின் படியான மீதி | கையிருப்பு சரி,பிழை பார்த்தல் அறிக்கைகளின் படியான மீதி | அதிகரிப்பு (குறைவு) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வார்ப்புப் பிரிவு | 911,618 | 987,450 | 75,832 |
| பிலிமதலாவ பித்தளைப் பிரிவு | 655,193 | 57,245 | (597,948) |
| இறப்பர் பிரிவு | 7,048,322 | 6.565,770 | (482,552) |

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(i) பெறவேண்டிய பண்டங்கள், சேவைகள் வரியாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 13,919,430 காட்டப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு முடிவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரி அறிக்கைகளில் அது ரூபா 230,740 ஆகக் காட்டப்பட்டிருந்தது. வேறுபாடு ரூபா 13,688, 690 ஆகும்.

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரி அறிக்கைகளின் பிரகாரம், நிறுத்திவைக்கப்பட்ட மீளளிப்பைப் பெறக்கூடிய பெறுமதிசேர்வரி ரூபா 230,440 ஆகும். எனினும், நிதிசார் கூற்றுக்களில் கொடுப்பனவு செய்யவேண்டிய பெறுமதி சேர்வரி ரூபா 346,482 ஆகக் காட்டப்பட்டிருந்தது. வேறுபாடு ரூபா 576,922 ஆகும்.

(iii) சபையின் 5 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத ரூபா 3,438,008 மீதியிருந்தது.

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

(அ) பெறவேண்டிய கணக்குகள்

(i) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின்படி 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 29 பெறவேண்டிய கணக்குகளில் 1 ஆண்டிற்குக் குறைந்த ரூபா 20,340,568 மீதியும் 1 தொடக்கம் 2 ஆண்டுவரையிலான ரூபா 13,147,138 மீதியும் 2 முதல் 4 ஆண்டு வரையிலான ரூபா 3,839,035 மீதியும் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 19,839,102 மீதியும் அடங்கலாக ரூபா 57,165,843 கூட்டுத்தொகை இருந்ததுடன் நட்டக்கடனுக்கான நிதியேற்பாடாக அமைந்தது ரூபா 5,514,921 அல்லது 10 சதவீதத்திற்கும் குறைவான தொகையே.

(ii) ஏகல, ஹொரணை, பல்லேகல, பன்னல ஆகிய கைத்தொழில் பேட்டைகளில் கடன்பட்டோராக அல்லாத 84 மீதிகளுக்குரிய ரூபா 5,188,562 கைத்தொழில் பேட்டைக் கடன்பட்டோராக 2010 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. போதியளவு நட்டக்கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(iii) மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் பெறப்பட்ட ரூபா 1,225,618 கூட்டுத்தொகையுடைய தனிப்பட்டோர் முற்பணம் தீர்த்துவைக்கப்படாதிருந்தன.

(ஆ) கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்
-----------------------------------------------------------------------

(i) காலப்பகுப்பாய்வின்படி, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 42 கணக்குகளுக்குரிய ரூபா 91,768,653 கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் ரூபா 72,607,310 ஆகவுமிருந்தது.

(ii) கைத்தொழில் பேட்டைகளை விட்டு நீங்கிய 201 கைத்தொழிலாளரின் ரூபா 4,403,395 வைப்புக்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கையில் தவறுதலாக மீளாய்வாண்டு முடிவில் அது கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(iii) தற்போது கைத்தொழில் பேட்டைகளில் ‘‘வாடகைக் கொடுப்பனவு உரிமையாளர்’’ இல்லாதபோதும் அவ்வாறான கைத்தொழிலாளர் 114 பேருக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய வைப்பாக ரூபா 10,181,454 தவறுதலாக 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தன.

(iv) ஒன்பது ஆளுக்குரிய மீதிகளுக்குரிய ரூபா 49,306 நிதிசார் அறிக்கைகளில் செலவு மீதிகளாக இருந்தன.

(v) மூன்று ஆண்டுகளைக் கடந்துவிட்ட திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புகளாக ரூபா 887,238 இருந்த போதும் கேள்வி நடவடிக்கைகள் முடிவுற்றதன் பின்னரும் அவை தீர்த்து வைக்கப்படாது கணக்குகளில் காட்டப்பட்டவாறிருந்தன.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

ஒவ்வொரு விடயத்திற்குமெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (i) | இறுதிக் கையிருப்பு - கழிவுப்பொருள் கையிருப்பு | 8,295,784 | கையிருப்புச் சரி,பிழை பார்த்தல் அறிக்கைகள் |
| (ii) | முற்கொடுப்பனவுகள் | 37,125,654 | நாளதுவரையாக்கப்பட்ட முற்கொடுப்பனவுப் பதிவேடு |
| (iii) | மீளப்பெறுமதியிடலால் ஏற்பட்ட இலாபம் | 16,697,397 | மீளப்பெறுமதியிடல் விபரம் உள்ளடங்கிய நாட்குறிப்பும் உறுதிச் சான்றும் |

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) அரசாங்க நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி 104, (ii) நி.பி 110, (iii) நி.பி 135, (iv) நி.பி 188, (2), (v) நி.பி 139(4), (vi) நி.பி 371 (vii) 756 மற்றும் 757 (viii) நி.பி 770(3) (ix)நி.பி 1645 (அ)(x) நி.பி 1647(ஈ), நி.பி 802 மற்றும் நி.பி II ஆந் தொகுதியின் VI ஆவது பட்டோலை (xi) நி.பி 1653 | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் XIV உபபந்தி 4.1 | ஏற்பாடுகளுக்கு முரணாக, வெளிக்கள கடமைகளில் ஈடுபட்டுள்ள நிறைவேற்றுதர ஊழியர்களுக்கு சீவனப்படிக்குப் புறம்பாக தங்குமிடப்படியை மிளளிக்கும் விதத்தில் நாளொன்றுக்கு ரூபா 300 வீதப்படி மீளாய்வாண்டில் ரூபா 322,655 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) சுற்றறிக்கைகள் | |
| (i) 2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வருடாந்த வரவு, செலவுத் திட்டதுடன் வரவு, செலவுத்திட்டமிடப்பட்ட ஐந்தொகை, |

| | | |
|---|---|---|
| | பிரிவு 5.2.1 | வருமானக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (ii) | 2002 ஒக்டோபர் 16 ஆந் திகதிய 9/2002 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மேலதிக நேர வேலைப் படிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 75 சதவீதத்தை மாத்திரம் செலவிடுவதை நோக்காகக் கொள்ள வேண்டுமாயினும், அவ்வரம்பையும் மீறி ரூபா 3,800,170 செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) | 2010 பெப்ரவரி 13 ஆந் திகதிய பீஈ/2010/04 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரது சுற்றறிக்கையின் 3,4,9,10,11 ஆம் பந்திகள் | அறிவுறுத்தல்களுக்கு முரணாக, சபையின் 4 வாகனங்கள் தேர்தல் காலத்தின்போது பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| (iv) | 1997 பெப்ரவரி 3 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஓராண்டிற்கும் மேலாக 4 பதவிகளுக்கு பதில் கடமையாற்றும் பதவிக்குரிய ஆரம்பச் சம்பளத்தில் ¼ படியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (v) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாதிருந்தன. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

2010 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் மீண்டுவருஞ் செலவினத்திற்கான உதவு தொகை ரூபா 221,250,000 ஆகும். ஆண்டின்போது சபையின் செயற்பாட்டு விளைவானது அரசாங்க உதவுதொகையைப் பெறுமுன்னர் ரூபா 240,000,525 பற்றாக்குறையை விளைவிப்பதாகவிருந்தது. இதனோடொத்த முன்னைய ஆண்டில் அரசாங்க உதவுதொகையாகிய ரூபா 222,000,000 கணக்கிலெடுக்கப்படுவதற்கு முன்னரான பற்றாக்குறை ரூபா 231,194,712 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் நலிவு ரூபா 8,805,813 ஆகும். வெளிவருவாயாகிய ரூபா 10.5 மில்லியன் குறைவே இந்நிலைமைக்கான மூல காரணமாகும்.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயற்திறன்

(அ) ஏக்கலயில் உள்ள கைத்தொழில் பேட்டைக் கட்டிடத்தின் 3 கூறுகளும் அபிவிருத்தி செய்யப்பட்ட 5 நிலப் பகுதிகளும் செயற்பாடற்ற கைத்தொழில் செயற்திட்டங்களாகின.

(ஆ) கைத்தொழிலாளர் மூலப்பொருட்களைப் பெறுவதற்குத் தேவையான நிதியேற்பாடாக சுழற்சி நிதியம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் செஸ் நிதியத்திலிருந்து ரூபா 5 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. அத்தொகை பேலியகொடை இறப்பர் உற்பத்தி அபிவிருத்திப் பிரிவுக்கு மூலப்பொருள் கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை.

(இ) செயல் திட்டத்தை உள்ளபடியான முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் 50 சதவீதத்திற்கும் குறைவாக நிறைவேறிய 28 சந்தர்ப்பங்கள் நிலவியதுடன் 9 பிரிவுகளில் 17 நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவேறாமலும் இருந்தன.

**2.2.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

---

**(அ) நடமாடும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு பஸ் ஒன்றைக் கொள்வனவு செய்தல்**

---

கிராமத்துக்குக் கிராமம் தொழில்நுட்பத்தை விநியோகிக்கும் நோக்கில் 2009 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூபா 8,712,000 செலவழித்துக் கொள்வனவு செய்யப்பட்ட பஸ் 2011 ஆம் ஆண்டில் 8 பயணங்களின்போது 3,098 கிலோமீட்டர் மாத்திரமே பயணஞ்செய்திருந்தது. கிராமத்துக்குக் கிராமம் தொழில்நுட்பத்தை விநியோகிக்கும் செயற்த்திட்டத்தின் தோல்வியினால் வாகனம் அதிகளவு காலம் பயணம் எதனையும் மேற்கொள்ளாதபோதும், பழுதுபார்க்க வேண்டிய நிலையை எட்டியிருந்தது.

**(ஆ) பயன்படுத்தப்படாத விலைப்பட்டியல் அச்சிடும் இயந்திரம்**

---

கட்டுபெத்த லக்கம் விற்பனை நிலையத்திகென 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 306,750 பெறுமதியான விலைப்பட்டியல் அச்சிடும் இயந்திரம் பயன்படுத்தப்படாதிருந்தது.

**(இ) கையால் இயக்கப்படும் குயவர்களுக்கான சக்கரங்களினது கொள்வனவும் விநியோகமும்**

---

கையால் இயக்கப்படும் ரூபா 906,450 பெறுமதியுடைய 68 குயவுச் சக்கரங்களில் 56 சக்கரங்கள் 2008 ஜூன் 11 ஆந் திகதியன்று வழங்குநரிடம் மீண்டும் தயாரிக்கப்படுவதற்காக் கையளிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு முடிவிலும் அவை சபையை மீண்டும் வந்தடையாதிருந்தன. பழுதாகிய எஞ்சிய 12 சக்கரங்களும் மீளத் தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

----------------------------------------------------

**கழிவுப் பொருள் செயற்திட்டம்**

----------------------------------------------------

செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, கழிவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்துதல் என்பவற்றிற்கான பிரமாண முறைமையைத் தயாரித்து அமுலாக்கவில்லை. கொள்வனவுகளை மேற்கொள்ளும்போதும் விற்பனை செய்யும்போதும் களஞ்சியப்படுத்தும்போதும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காணப்படுகின்றன.

(i) கழிவுப் பொருள் கொள்வனவிற்காக 2007 ஆம் ஆண்டில் சுங்கத் திணைக்களத்திற்கு ரூபா 4,591,122 மற்றும் கைப்பணிப் பொருட்கள் சபைக்கு ரூபா 2,000,000 முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டில் ரூபா 1,500,000 தொகை லக்கல விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவை மீளாய்வாண்டு முடிவுவரை தீர்த்து வைக்கப்படாதுமிருந்தன.

(ii) மீளாய்வாண்டளவில் முற்கொடுப்பனவாக 5 நிறுவனங்களுக்கு ரூபா 2,811,759 கொடுப்பனவு செய்து ஏறக்குறைய ஓராண்டாகிவிட்டபோதும், குறித்த பொருட்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) கழிவுப் பொருள் கொள்வனவிற்கு முற்கொடுப்பனவு மேற்கொள்கையில் கட்டளை வழங்கப்படாது பணம் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் கொள்வனவு செய்யப்படும் பொருள் யாது, அதன் அளவுயாது போன்றவற்றை நிச்சயப்படத்த முடியாதிருந்தது.

(iv) சபையுடன் தொடர்பில்லாத ரூபா 775,263 க்கான புதினப் பத்திரிகை விளம்பரத்திற்காக செயற்திட்டத்தின் கீழ் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(v) கழிவுப் பொருள் கொள்வனவிற்கு ஒரு முற்பணம் வழங்கப்பட்டு அதற்குச் சமமாக கழிவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளாது மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(vi) சிறு கைத்தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் கழிவுப் பொருட்களை வழங்கவேண்டுமாயினும் அதற்கு முரணாக 5 நிறுவனங்களிலினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 240,097,624 பெறுமதியான கழிவுப் பொருட்கள் 10 பெரிய கைத்தொழிலாளர்களுக்கிடையே பகிர்ந்துகொள்ளப்பட்டிருந்தன. மேலும், அவர்களிடமிருந்து பெற வேண்டிய தொகை பெறப்பட்டதைக் குறிக்கும் நிதிப் பிரிவினது பற்றுச்சீட்டுக்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை.

(vii) கழிவுப பொருள் செயற்திட்டத்தின் பெரிய கீழ் அளவிலான வர்த்தகர்களும் போக்குவரத்து உரிமையாளர்களும் சிறிய அளவிலான வர்த்தககர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

### 2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையில் 6 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் காணப்படுவதுடன் அக்கணக்குகளுக்குள் ரூபா 80,854 மீதியும் ரூபா 175 மேலதிகப்பற்று மீதியும் இருந்தன.

### 2.2.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமதி மதிப்பிடப்படாத மஹியங்கனை மியுனுகம கட்டிடம் மற்றும் பன்னல பொருத்த தன்மை தொழில்நுட்ப நிலையத்திக் விடுதி, ரூபா 1,412,000 பெறுமதியான பதுளை உற்பத்திக் காட்சியகமும் விற்பனை நிலையமும், ரூபா 4,131,520 பெறுமதியான கொட்டகலை அத்தியட்சகர் பங்களாவும் 3 முதல் 14 ஆண்டுகள் வரையான காலம் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) காளான்களை உலர்த்தும் ரூபா 1,180,000 பெறுமதியுடைய இயந்திரம், ரூபா 298,500 பெறுமதியுடைய 3 DOUGH கலவை இயந்திரங்கள், ரூபா 87,947 பெறுமதியுடைய குணராகம கிராமத்தில் புல்லினாலும் பனை ஓலைகளாலும் உருவாக்கப்பட்ட பொருட்களும், ரூபா 159,000 பெறுமதியான விநியோக வகையைச் சேர்ந்த முச்சக்கரவண்டியும் பெறுமதி குறிப்பிடப்படாத கார் ஒன்றும் 2 முதல் 11 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாதிருந்தன.

### 2.2.6 இணங்காணப்பட்ட இழப்புகள்

----------------------------------------

(i) 2006 செப்டம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான சம்பள அளவுத்திட்டத்தை அடிப்படையாக எடுத்துக் கொள்ளாததன் காரணமாக தவறாகச் சம்பளத்தைக் கணிப்பிட்டமையால் 2006 முதல் 2010 வரையான காலப்பகுதியில் ரூபா 6,268,931 கூடுதலாகவும் ரூபா 1,212,589 குறைவாகவும் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(ii) நவபிம கழிவுப் பொருள் களஞ்சியத்தில் கையிருப்பு காணாமல்போனமையால் ஏற்பட்ட ரூபா 313,091 நட்டமானது குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) பொல்வத்த களிமண் கிராமத்தில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 260,400 பெறுமதியான 28 கையால் இயக்கப்படும் குயவரின் சக்கரங்கள் பிரமாணங்களுக்கேற்ப அமையாததால் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன.

(iv) ஹீனடியன தும்புக்கிராமத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 55,200 பெறுமதியான 2 தும்புக்கயிறு திரிக்கும் இயந்திரங்கள் தொலைந்து போயின.

(v) மீளாய்வாண்டின்போது 7 வங்கிக் கணக்குகளில் உள்ள மேலதிகப்பற்று மீதிகளுக்காக ரூபா 44,658 மேலதிகப்பற்று வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.7 ஆளணியினரின் ஆகுசெலவு

----------------------------------------

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த அடிப்படையிலும் அமைய அடிப்படையிலும் மீளாய்வாண்டின்போது 53 பேர் சேவையிலமர்த்தப்பட்டு அவர்களுக்குச் சம்பளமாக ரூபா 12,316,092 வழங்கப்பட்டிருந்தது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் உள்ள 262 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.8 யாக்கத்திட்டம்

---------------------

2003 ஜூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் யாக்கத்திட்டம் நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுப்படாததுடன் ஆளணித் தேவை, அமைப்பு வரைபடம், SWOT பகுப்பாய்வு என்பன அதில் உள்ளடங்கவுமில்லை.

### 2.2.9 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

-------------------------------------------------------------------

2003 ஜூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடைவ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எனினும், 2010 ஆம் ஆண்டிற்கான கூட்டங்கள் நடைபெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தினது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல்
(ஆ) வரவு, செலவுத்திட்டம்
(இ) கணக்கீடு மற்றும் கணனி முறைமை
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) வாகனப் பாவனையும் பதிவேடுகளைப் பேணுதலும்
(ஊ) கழிவுப் பொருள் கொள்வனவு, விற்பனை
(எ) முற்பணம்
(ஏ) கையிருப்புக் கட்டுப்பாடு